# மொத்த விலைச் சந்தையில் அந்நிய வணிகர்களின் பழங்கள், காய்கறிகளை

# மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது



**நமது நிருபர்**

கோலாலம்பூர், ஜூலை 4– கோலாலம்பூர் மொத்த விலைச் சந்தை சுற்றுப் பகுதியில் காய்கறி, பழங்களை விற்பனை செய்யும் அந்நிய வணிகர்கள் மீது பொருட்களைப் பறிமுதல் செய்யும் 9 நடவடிக்கைகளை மாநகர் மன்றம் மேற்கொண்டது.

இந்நடவடிக்கை அமலாக்கத் துறை, சுகாதாரத் துறை, சுற்றுச்சூழல் துறை, பத்து கிளை அலுவலகம் ஆகியவை இணைந்து சோதனை மேற்கொண்ட பிறகு சிறு சட்டம் 3(1), 2016 சிறு வணிகர்கள் உரிமச் சட்டம் (கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேசம்)இன் கீழ் மேற்கொள்ளப்பட்டது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்தது.

இதில் 1974 சாலை, வடிகால் மற்றும் கட்டடச் சட்டம் 46(1)(டி) பிரிவின் கீழ் தடையை மாற்றக்கூடிய ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.